**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

**மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 07.09.2016**

**மாநிலத்தின் கடந்தவாரவானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 28°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (07.09.2016 முதல் 11.09.2016)**

**1. மேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களுக்கும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 76 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 53 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 17 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- கடந்த வார பெறப்பட்ட மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி மானாவாரி கரிசல் நிலங்களை முன்பருவ விதைப்பிற்கு தயார் படுத்தவும்.
- மஞ்சள் கிழங்கு பருக்கும் நிலையில் உள்ளதால் மண்ணில் அதிக ஈரத்தன்மையோ அல்லது வறட்சியோ இல்லாமல் போதிய நீர்ப்பாசனம் செய்யவும்.
- எதிர்பார்க்கப்படும் மழையினை பயப்படுத்தி சம்பா நெல் நாற்றாங்காலில் மத்திய கால வயதுடைய நெல் இரக விதைகளை விதைக்கவும்.
- தற்போதைய வானிலையில் கறவை மாடுகள் மற்றும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் வரும் செப்டம்பர் மாதம் 1 ம் தேதி முதல் 30 ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பு ஊசி கிராம கால்நடை மருத்துவமனைகளில் இலவசமாக போடப்படும். விவசாயிகள் இச்சேவையினை பயன்படுத்திக் கொண்டு கால்நடைகளை இந்த நோய் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடனும் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 34°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 42 முதல் 74 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 13 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ முன்பருவ சம்பா நாற்றாங்கால் விடாத விவசாயிகள் காலத்தை கருத்தில் கொண்டு மத்தியகால (135 நாட்கள்) வகை தேர்ந்தெடுத்து நேரடியாக புழுதி விதைப்பதற்கு தகுந்த வானிலையாகும்.
- ✓ சம்பா வயல்களில் நேரடி விதைப்பு செய்யும் பொழுது டிராக்டர் மூலம் இயங்கும் விதைக்கும் கருவிக்கு ஏக்கருக்கு 15 கிலோ மற்றும் ஆட்கள் கொண்டு தெளிக்கும் பொழுது ஏக்கருக்கு 30 கிலோ விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும்.
- ✓ முன் சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்லல்பேட், 15 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.

**3. தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 36°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 44 முதல் 68 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 முதல் 15 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ கடந்த வார பெறப்பட்ட மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவான மானாவாரி நிலங்களை உழவு செய்து தயார் செய்யவும்.
- ✓ மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்கும் முறையாக நிலத்தை சட்டிக்கலப்பையை பயன்படுத்தி ஆழமாக உழவு செய்யவும். கடைசி உழவிற்கு முன்பு தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 12.5 டன் / எக்டர் என்ற அளவில் இடவும். ரோட்டோவேட்டர் கருவியை பயன்படுத்தி நிலத்தை நன்கு பண்படுத்தவும்.

- ✓ வரும் தினங்களில் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் முருங்கையில் காய் ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட காய்களை சேகரித்து அழித்துவிட வேண்டும். பென்தியான், டைக்குளோர்வாஸ், மானோகுரோட்டோபாஸ் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மிலி என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. தேனி மாவட்டத்திலும் இலேசான மழை பெற வாய்ப்புள்ளது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 28°செ முதல் 29°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 34°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் 19°செ முதல் 20°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 24°செ முதல 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 36 முதல் 83 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 முதல் 13 கி.மீ வரை வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ முன்பருவ சம்பா நாற்றாங்கால் விடாத விவசாயிகள் காலத்தை கருத்தில் கொண்டு மத்தியகால (135 நாட்கள்) வகை தேர்ந்தெடுத்து நேரடியாக புழுதி விதைப்பதற்கு தகுந்த வானிலையாகும்.
- ✓ கால்நடைகளின் கொட்டகையின் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வதன்மூலம் ஒட்டுண்ணிகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்தி அதனால் பரவும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.
- ✓ வரும் வானிலை பயன்படுத்தி விவசாயிகள் பருத்தி மற்றும் மக்காச்சோளம் நடவுதற்கு எற்றவாறு நிலத்தை தயார் செய்து படுக்கையை ஏற்படுத்தி விதைக்கலாம்.
- ✓ வரும் தினங்களில் மிதமான மேகமூட்டம் மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலையில் முருங்கையில் காய் ஈ தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. இதனைக் கட்டுப்படுத்த பாதிக்கப்பட்ட காய்களை சேகரித்து அழித்துவிட வேண்டும். பென்தியான், டைக்குளோர்வாஸ், மானோகுரோட்டோபாஸ் ஆகியவற்றில் ஏதேனும் ஒரு மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு இரண்டு மிலி என்ற விகிதத்தில் கலந்து தெளிக்க வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 17° செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 44 முதல் 92 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை.**

- ✓ தொடர் மழையின் காரணமாக, நோய் ஏற்படுவதை தடுக்க, சூடோமோனாஸ் 10 மில்லி / ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் கலந்து பயிர்களின் மீது தெளிக்கவும்.
- ✓ உருளை கிழங்கில் வெப்ப நிலை மாற்றம் காரணமாக, சாம்பல் நோயை கட்டுப்படுத்த சைமோமாக்சில் 8% + மாங்கோசெப் 64 % சதவீத மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து தெளிக்கவும்.
- ✓ தொடர் மழையின் காரணமாக, கோஸ் மற்றும் காலிபிலவரில் தலை அழுகலை தடுக்க, காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2 கிராம் அளவில் ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**5. வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் தென்படும். இலேசான மழை பெற வாய்ப்புள்ளது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 56 முதல் 76 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 5 கி.மீ வேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தென்மேற்கு பருவமழை தற்போது தாக்கமற்று காணப்படுகிறது. ஆயினும், தென்மேற்கு பருவமழைக் காலமாதலால், பிற்பகலுக்கு மேல் மிதமான மேகமூட்டமும், சில இடங்களில் லேசான மழையுடனுமான வானிலை நிலவும். கோழிகளில் தீவன எடுப்பும், முட்டை உற்பத்தியும் இயல்பாகவே இருக்கும்.
- ✓ தீவன மூலப்பொருட்கள் பூ ஞ்சான நச்சு பரிசோதனையும,. ஈரத்தன்மையும் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே பயன்படுத்தப்பட வேண்டும்.
- ✓ வருகின்ற புரட்டாசி பட்டத்தில் பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்தால் நல்ல மகசூலைப் பெறலாம். குறுகிய வயதுடைய (60 முதல் 65 நாட்கள்) உளுந்து இரகங்களான கோ.6. வம்பன்-3 அல்லது 6 அல்லது வம்பன்(உளுந்து 4) மற்றும் 5 போன்ற இரகங்களை தேர்வு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு 10 கிலோ விதை தேவை. விதை நேர்த்தி செய்ய 1 கிலோ விதையுடன் 4 கிராம் *டிரைக்கோ டெர்மா விரிடி* அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் கலந்து விதைப்பு செய்யவும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களுக்கு இலேசான மழை பெற வாய்ப்புள்ளது. பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 35°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல்

26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 39 மற்றும் 77 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 20 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ➢ தற்போதைய வானிலையில் கறவை மாடுகள் மற்றும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் வருவதற்கு வாய்ப்புள்ளது. வரும் செப்டம்பர் மாதம் 1 ம் தேதி முதல் 30 ம் தேதி வரை கோமாரி நோய் தடுப்பு ஊசி கிராம கால்நடை மருத்துவமனைகளில் இலவசமாக போடப்படும். விவசாயிகள் இச்சேவையினை பயன்படுத்திக் கொண்டு கால்நடைகளை இந்த நோய் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளவும்.
- ✓ அடைப்பான் நோய் தாக்க வாய்ப்புகள் பகுதிகளில் உழவர்கள் தங்களுடைய மாடு மற்றும் ஆடுகளுக்கு அருகில் உள்ள கால்நடை மருந்தகத்தை அணுகி அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- ✓ காற்று எதிர்பார்க்கப்படுவதால் முன்பட்ட மற்றும் நடுபட்டங்களில் பயிரிடப்பட்ட கரும்பிற்கு விட்டம் கட்டவும். மேலும் 5 மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை எதிர்பார்க்கப்படவில்லை பகல்நேர வெப்பநிலை 29° செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை 24°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 67 முதல் 70 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு 18 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ➢ காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் வாழையில் வாடல் நோயைக் கட்டுப்படுத்த, நோய் பாதித்த மரங்களை வெட்டி அளிக்க வேண்டும். பின் சுண்ணாம்பு 1-2 கிலோ/ குழி வரை இட்டு குழியை மூடவும்.
- ➢ வளரும் மிளகு கொடிகளை தாங்கும் மரங்களுடன் கட்டிவிடவும். இதனால் அதிக காற்றிலிருந்து கொடிகளுக்கு சேதமில்லாமல் பாதுகாத்துக்கொள்ளலாம்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**

**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**

**த.நா.வே.ப.கழகம்,கோவை.**